
அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...


ஆசிரியர் தலையங்கம் .................................. 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

சிரிப்பு..................................................................2

சிலப்பதிகாரம்........................................................3

மக்கள் சக்தி இயக்கம் .................................... 6

கவிதைகள். ........................................................... 7



சிந்தனை 7 செயல் 7 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம். சூன்2025

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

## பனைகளைப் பாதுகாப்போம்! பனைச்செல்வத்தை மீட்டெடுப்போம்!

தமிழ்நாட்டுக்கும் பனைமரத்துக்கும் தொன்மையான உறவு உண்டு. தமிழகத்தின் அடையாளம் பனைமரம்!. இது ஒரு பயன்பாட்டு மரம் மட்டுமல்ல, பண்பாட்டு மரமும் கூட. தமிழ்மண்ணின் வரலாற்றோடுப் பின்னிப்பிணைந்து, தென்தமிழகத்தின் மனித வாழ்வோடு ஒன்றிப் போனவை பனைமரங்கள்.

நீண்டகாலம் நம்மோடு தொடர்புடைய பனைமரங்கள், தூத்துக்குடி, நெல்லை, இராமநாத புரம் மாவட்ட மக்களின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தவை. அப்படிப்பட்டப் பெருமைக்குரிய பனைமரங்களும், பனைத்தொழிலும் இன்று நலிவடைந்து வருவது, வருந்தத் தக்கது மட்டுமல்ல, பெரும் பொருளாதார இழப்புமாகும்.

இந்தியாவில் உள்ள மொத்த பனைமரங்களில் 50 விழுக்காடு பனைமரங்கள் தமிழகத்தில் உள்ளன. 5 கோடி பனைமரங்கள் தமிழ்நாட்டில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இப்பொழுது அவ்வளவு இருக்குமா என்பது ஐயப்பாடே!. பனங்காடு அழிவின் விளிம்பில் உள்ளது, நாம் பனைச்செல்வத்தை இழந்துக் கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை.

**என்ன செய்ய வேண்டும் ?**

1.இருக்கின்ற பனைகளைப் பராமரித்துப் பாதுகாக்க வேண்டும். பயன்தரும் பனைகளை வெட்டுவதற்கு இருக்கின்ற தடை முழுமையாகப் பின்பற்றப்பட வேண்டும்

2.புதிதாகப் பனைகளை உருவாக்க வேண்டும். அண்மைக்காலத்தில் சில தன்னார்வ அமைப்புகள் பனங்கொட்டை நடவு செய்து வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

3.நூற்றுக்கணக்கானப் பயன்பாடுகளைக் கொண்டிருப்பது பனைமரம் மட்டுமே!.பனைப்பொருட் கள் பயன்பாட்டை ஊக்கப்படுத்த வேண்டும்.

4.சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் நெகிழிப் பொருட்களின் பயன்பாட்டைக் குறைத்துக் கொண்டு, கூடியமட்டும் பனைசார்ந்த பொருட்களைச் (ஓலை, நார், பனந்தும்பு கொண்டு செய்யப்பட்டவை) சந்தைப்படுத்த வேண்டும். சந்தை வாய்ப்பு இருந்தால்தான் எந்தவொரு தொழிலும் நிலைத்து நிற்கும்.

5.பனைசார்ந்த கைவினைப் பொருட்கள், ஏற்றுமதி வாய்ப்பைப் பெற வேண்டும்.

6தரமான தொழில்நுட்பத்துடன் .பனம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்பட வேண்டும். ஊட்டம் மிக்க பனம்பழத்தின் சுவை அறியா மக்களுக்கு அதை அறிமுகம் செய்ய வேண்டும்.

7.பனங்கருப்பட்டி மற்றும் பனங்கற்கண்டு தயாரிப்பில் ஈடுபடும் மக்கள் அதில் கலப்படம் செய்யும் அவலநிலையைக் காண்கின்றோம். பதநீரும் பெரும்பாலான இடங்களில் கலப்படம் இன்றிக் கிடைப்பதில்லை. விலை அதிகமாகக் கொடுத்தாலும், தூய்மையானப் பொருட்களை வாங்கவே மக்கள் விரும்புவார்கள். எனவே, கலப்படம் செய்பவர் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8.கூட்டுறவு சங்கங்கள் மூலம் பதநீர், கருப்பட்டி போன்ற அனைத்து பனைப்பொருட்களையும் சந்தைப்படுத்தி, பனைத்தொழிலில் உள்ளவர்களுக்கு நியாயமான வருமானம் கிடைப்பதற்கு அரசு, பனைவாரியத்தை முழுமூச்சுடன் இயங்கச் செய்ய வேண்டும்.

9.பனைமரங்கள், நிலத்தடி நீரைப் பாதுகாக்கின்றன, புயலைத் தடுக்கும் அரணாக விளங்குகின்றன.

10.அரசு மனம் வைத்தால், பனைப் பாதுகாப்பை ஓர் இயக்கமாக முன்னெடுத்து, பனைச்செல்வத்தை மீட்டெடுக்க முடியும் ! ..........அன்புடன் ஆசிரியர்



## நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

பிறரது அதிருப்தி என்பது பாராட்டின் மறுபக்கம். அது நமது தனித்தன்மையைப் பறித்து விடுவதால் நாம் விட்டு விடக்கூடாது. பிறர் பாராட்டும் போது எப்படி அதை ஏற்றுக் கொள்கிறோமோ அதே போல நிச்சயமாகப் பிறரது அதிருப்தியையும் கண்டனத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நம்மை ஆட்டுவிக்கும் சூத்திரக் கயிறு பிறர் கையிலிருந்து இயங்கும். நாம் ஆட்டுவிக்கப்படுவோம்.

அதேபோல் வாழ்வில் இடர்பாடுகள் நேரிடும்போது பலர், “நான் துரதிர்ஷ்டசாலி” என்றும், “துக்கத்தை அனுபவிக்கவென்றே பிறந்த பெண் ஜென்மம்” என்றும், “என்வினை என்னைத் தொடர்கிறது” என்றும் பல்வேறு விதங்களில் தங்களைப் பற்றி முத்திரை குத்திக் கொள்கிறார்கள். தங்களைப் பரிதாபச் சின்னமாய் ஆக்கிக் கொள்கிறார்கள். சில தோல்விகளிலிருந்தோ, சில குறைபாடுகளிலிருந்தோ, அல்லது பிறர் ஆமோதிப்பைப் பெறாததனாலோ இவர்கள் இப்படியொரு தண்டனையைத் தங்களுக்குத் தாங்களே அளித்துக் கொள்கிறார்கள். ஏதோ கடவுள் உலகில் நம்மையே தேர்ந்தெடுத்துக் கஷ்டங்களை அள்ளிக் கொடுப்பது போல் கற்பனை செய்து கொண்டு அவதிப்படுகின்றனர்.



கடவுள் என்ன செய்வார், பாவம்!
அவருக்கு வேறு வேலை இல்லையா ?

நம்மை நாமே “தோல்வியாளன்,” “இயலாதவன்” என்று முத்திரையிட்டுக் கொண்டு நமது எதிர்காலத்தைச் சில எண்ணங்களால் முடக்கி விடக்கூடாது.

நன்றி...கங்கை புத்தக நிலையம்

## சிரிப்பு.....

முனைவர்.லெ.பாஸ்கர்

மனிதனின் மகத்தான குணங்களில் ஒன்று “சிரிப்பு.” சிரிப்பு என்ற ஒன்று இல்லையென்றால் நமது வாழ்க்கை, வேதனையும், துயரமும் நிரம்பியதாக, வறட்சியாகவே இருக்கும். சிரிப்புக்குப் பின்னால் பல அறிவியல் உண்மைகளும், அதனால் நமக்குப் பல நன்மைகளும் இருப்பது நாம் அறிந்ததே!. “வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்” என்பது அனுபவம் தந்த பாடம் அல்லவா ?. மனம்விட்டுச் சிரிக்கும் போது, அந்தச் சிரிப்பு, நம் நரம்புமண்டலம் புத்துணர்ச்சியுடன் செயல்பட ஒரு வினையூக்கியாக மாறுகிறது. அதுமட்டுமல்ல கள்ளமற்றச் சிரிப்பால் நம் முகமும் அகமும் பொலிவடைகிறது. கள்ளமற்றச் சிரிப்பு என்று ஏன் சொல்கிறேன் என்பது உங்களுக்கு விளங்கியிருக்கும். சிரிப்பிலே பல வகையுண்டு. எள்ளல் சிரிப்பு, ஏளனச் சிரிப்பு, வஞ்சகச் சிரிப்பு, ஆணவச் சிரிப்பு என்று பிறர் மனதைப் புண்படுத்துகின்ற சிரிப்புகள் உண்டு. கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் ஒரு பாடலில் இவ்வகையானச் சிரிப்புகளையெல்லாம் நடித்துக் காட்டி நம்மைச் சிந்திக்க வைப்பார்.

எனவே, நம் சிரிப்பு நமக்கு உற்சாகத்தை தருவதோடு, பிறருக்கு மகிழ்ச்சியைத் தருவதாக இருக்க வேண்டும். எந்த விதத்திலும் அது பிறரைக் காயப்படுத்தி விடக்கூடாது. பல நாடுகளில் நகைச்சுவை மன்றங்கள் வைத்து சிரித்து மகிழ்வதைப் பார்க்கிறோம். சிரிப்போடு சிந்தனையும் சேரும் போது நம் வாழ்வில் துன்ப எண்ணங்கள் மறைந்து, இன்பம் மலருவதைக் காணலாம்.



சிரித்து வாழப் பழகுங்கள்! சீராகும் உங்கள் வாழ்க்கை!
சிந்தித்து வாழப் பழகுங்கள்! செம்மையாகும் உங்கள் வாழ்க்கை!

# சிலப்பதிகாரம் காவியம்

**மதுரைக் காண்டம். வாழ்வில் மீண்டும் மலர்ச்சியைக் காண மதுரை மாநகருக்குச் சென்ற கோவலன் கண்ணகி இருவரின் முடிவும், மதுரையின் அழிவும்.**

**மரு.த.இராசலிங்கம்.**

.சென்ற இதழ் தொடர்ச்சி.....

### 270.மன்னனின் முடிவு

தென்பாண்டிக் கடலின்நல் தேர்ந்த முத்து
தேவியவள் காற்சிலம்பின் உள்ளி டாகும்
உன்கணவன் வசமிருந்து மீட்ட சிலம்பை
உடைத்திங்கு ஆய்ந்தறிவோம்! மன்னன் சொல்ல,
பொன்னோடு மாணிக்கப் பரல்கள் உள்ளே
பொதிந்துவைத்த காற்சிலம்பு எனதே ஆகும்
கண்ணாலே அவையோரும் காணு மாறு
காவலனே! அறம்காப்பாய்! கண்ணகி சொல்ல,

### 271.மன்னன் கண்டான் மாணிக்கப் பரல்கள்

கோவலனின் வசமிருந்த சிலம்பை அங்கு
கொண்டுவர மன்னவனும் ஆணை யிடவே,
ஏவலாளும் ஓடிச்சென் றந்த சிலம்பை
எடுத்துவந்து மன்னவனின் முன்னே வைக்க,
ஆவலாக அனைவருமே அமைதி யாக
அசைவின்றி நடப்பதையே உற்று நோக்க,
காவலனாம் பாண்டியனும் சிலம்பின் உள்ளே
கண்டானே மாணிக்கப் பரல்கள் தானே!

### 272.சிலம்பு உடைத்தாள் கண்ணகி

உண்மையங்கே மாணிக்கப் பரல்க ளாக
ஒளிந்திருக்க உறுத்தியதே மன்னன் உள்ளம்
வன்மையான கைகளும்தான் வலுவி ழந்து
வைத்திருந்த சிலம்பதுவும் தரையில்வீழ்ந்து
பொன்பொதிந்த கற்களும்தான் பரவி சிந்த,
பொல்லெனவே கண்ணகியும் பொங்கி யெழுந்து,
தன்கையில் வைத்திருந்த சிலம்பை உடைக்க,
தனியொருகல் மன்னவனின் உதட்டில் தெறிக்க...

### 273.மன்னன் தீர்ப்பு

உதட்டில்புண் படஉள்ளம் குருதி சிந்த...
உயிர்போன்ற நீதியோதன் நாட்டில் தாழ,
அதனமாக அதிர்ந்திட்ட மன்னன், தீர்ப்பும்
அக்கணமே அம்மன்றம் அறியச் செய்தான்
மிதமாக இருப்பதில்லை தீர்ப்பும் என்றே
மெய்யறிந்த அவையோரும் அறிந்து கொண்டார்.
இதமாக கண்ணகியை நோக்கி மன்னன்
இரப்பவன்போல் கைகளையே குவித்து வணங்கி.....

### 274.உயிர்துறந்தான் பாண்டியன் நெடுஞ்செழியன்

வெண்கொற்றக் குடையும் சாய,
வேந்தனவன் செங்கோல் வளைய
"மன்பதைகாக் கும்தென் னாட்டு
மாநிலத்துக் காவல் இன்று
என்னோடு அழிந்து போக,
யானோஅரசன்? யானே கள்வன் !
பொன்செய்கொல் லன்தன் சொல்லை
பொறுப்பின்றி கேட்டுத் தாழ்ந்தேன் !
என்மேனி அரியணை தாங்க
இனியுமில்லை தகுதி யன்றோ ?
கண்போலும் நீதி காக்கும்
கடமைமறந்தேன்! கெடுகஎன் ஆயுள் !"
தென்னவனும் அணுப்பொ ழுதில்
தீர்ப்பெழுதி மயங்கி சாய..
இன்னுயிரும் துறந்து வீழ்ந்தான் !
இறந்தாலும் அறமாய் வாழ்ந்தான் !

**275.உயிர்துறந்தாள் கோப்பெருந்தேவி**

மறப்போரில் மாமன்னன் மடிந்தால் கூட
மாதரசி மக்களுக்காய் வாழ்வ துண்டு
அறப்போரில் அகமுடையான் ஆவி துறக்க
அழுவதால்மட் டுமேஅறமும் நிலைப்ப
துண்டோ ?
கறையொன்று தன்வாழ்வில் படிந்த தென்று
கண்ணீரும் கவலையுமே கொண்ட வள்தான்
சிறையொன்று எனக்கென்று இதுவே என்று
செழியனோடுஉயிர்துறந்தாள்கோப்பெருந்தேவி

**276.அவையில் கண்ணகி உரைத்தவை**

கொண்டவனும் தழுவிய சாவை
கோப்பெருந்தேவி பற்றியே மாய
கண்டவளாம் கண்ணகி சற்றே
கலங்கியதால் மனமது மாய,
பெண்டுநான்என் கணவனும் கொண்ட
பெரும்பழியை துடைத்திட, நீதி
மண்டலத்தில் நிலைநிறுத் தற்கே
மாய்ந்திடாது உயிரது காத்தேன்.

எண்ணிடாதீர் என்னையும் பிழையாய்
என்குற்றம் எதுவுமே இல்லை!
அண்டியிங்கு பிழைத்திட வந்து
அடைந்திட்டோம் வாழ்வதன் முடிவை
கண்டிக்கும் குரலது ஓங்க,
கண்ணகியும் உரைத்தது கேட்டு
தூண்டிலிட்ட புழுவென அங்கே
துயருற்றார் அவையோ ரெல்லாம்.!

**277.மக்களின் மனநிலை**

மன்னனோடு மாதேவி மாண்ட செய்தி
மண்ணில்நீர் பரவல்போல் மதுரை யோடு
தென்புலம்எங் கெங்கும்தொ டரிபோல் செல்ல
தென்னவனின் குடிகளெல்லாம் கலக்கம்
கொள்ள,
என்பிலதனை தழல்போலக் காய்ந்து தீய்க்க
என்செய்வோம் என்றவாறு மக்க ளெல்லாம்
துன்பத்தீ தொற்றெனவே தொற்றிக் கொள்ள
கொன்றன்ன இன்னலுற்றார் உய்தல் அற்றார்.

அரசியலில் ஆய்ந்தறியா பிழையும் செய்தால்
அறமேஅவ் அரசனுக்கு கூற்ற மாகும்
முரசறைந்தாற் போலும்முன்னோர்கள்சொன்ன
முறையதனை இன்றுநாமும் நேரில்கண்டோம்
இரங்கலுடன் மக்களும்தான் ஒன்றாய் கூடி
இரவெல்லாம் விழித்திருந்து நொந்து திகைத்து
மரம்போலும் சமைந்துநின்றார் மதுரையெங்கும்
மன்னன்தே விக்காக மனமே வெந்தார்.

................தொடரும்.

**இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் காப்பியத்தை, அதன் உட்கருவை , கதையை மாற்றாமல், சில பகுதிகளை வேண்டாம் என்று விடுவித்தும், கதையின் சீரான போக்கை கருத்தில் கொண்டு சில இடங்களை நிரவல் செய்தும் எனது நடையில், எளிய மரபுக்கவிதைகளாக எழுதி வருகிறேன் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.**

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
## கலித்தொகை --- பாலைக்கலி

**இளவேனிற் காலத்தில்** வருவேன் என்று சொல்லிச் சென்றத் தலைவன் வரவில்லை. அதை நினைத்து, தலைவி பலவும் சொல்லிப் புலம்புகிறாள். எப்படியெல்லாம் புலம்புகிறாள் பாருங்கள்.. இப்பாடலில் உள்ள உவமையழகைப் பாருங்கள்!

**மடியிலான் செல்வம் போல் மரன் நந்த, அச் செல்வம்**
**படி உண்பார் நுகர்ச்சி போல் பல் சினை மிஞிறு ஆர்ப்ப,**
**மாயவள் மேனி போல் தளிர் ஈன, அம் மேனித்**
**தாய சுணங்கு போல் தளிர்மிசைத் தாது உக,..........**

அதாவது சோம்பல் இல்லாமல் உழைக்கின்ற ஒருவனிடம் செல்வம் சேருவது போல், மரங்கள் பூத்துக் குலுங்குகின்றன, அப்படி ஒருவன் சேர்த்த செல்வத்தைச் சோம்பேறிகள் உண்டு திரிவது போல், வண்டுகள் பூக்களின் தேனை உண்டு, கிளைகளைச் சுற்றிச் சுற்றி ஆரவாரம் செய்கின்றனவாம்.. திருமகளின் செம்மையான நிறம் போலத் தளிர்களை மரங்கள் ஈன, அவள் மேனியிலே காணப்படும் சுணங்கு எனப்படும் அழகுத் தேமல் போலத் தாதுகள் அத்தளிர்களின் மேல் உதிர்ந்து கிடந்தனவாம். என்னே! ஒரு கற்பனை!. இப்படிப்பட்ட இளவேனிற் காலத்துக் காட்சிகளைக் கண்டுத் தலைவி ஏக்கத்துடன் இருக்கும் போது, எங்கிருந்தோ குயில் ஒன்று கூவுகிறது..தன் தனிமையைக் கண்டு இந்தக் குயில் எள்ளி நகையாடுகிறதோ என்று அவளின் பேதை நெஞ்சம் வருந்தியதாம்.

**நனி எள்ளும் குயில் நோக்கி இனைபு உகு நெஞ்சத்தால்,** ....என்று புலவர் பாடுவதன் மூலம், குயிலின் இன்னிசைக் கூட, தனிமைத் துயரைப் போக்கவில்லை என்பது புலனாகிறது.

மேலும், தலைவியின் தனிமை வாட்டத்தைக் கூறுமிடத்து, செய்யுளின் சீர் வரிசைகளை மிகவும் நயம்பட அமைத்துள்ளப் பாங்கு போற்றத் தக்கதாகும். அதன் இசை வடிவம், துன்ப நிலையையும் இனிமையாக்கும் இலக்கிய நயமாகும் .எண்ணி, எண்ணி வியப்புற வைப்பதாகும்.

**பாஅய்ப் பாஅய்ப் பசந்தன்று, நுதல்**
**சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன, தோள்**
**நனி அறல் வாரும் பொழுது என, வெய்ய**
**பனி அறல் வாரும், என் கண்.**

என்ன சொல்கிறாள் தலைவி ? என் நெற்றி படிப்படியாகப் பசலை பாயவில்லை, அது முழுவதுமே பசந்துவிட்டது. என் தோள்கள் முழுவதுமாகத் தளர்ந்து மெலிந்து விட்டன. குளிர்ந்த சாரல் பெய்யும் இக்காலத்தை நினைந்து, என் கண்கள் வெம்மையான கண்ணீர் நிறைந்து ஒழுகிக் கொண்டிருக்கின்றன.

.......உவமையழகு தொடரும். **மரு.த.இராசலிங்கம்**

# மக்கள் சக்தி இயக்கம். மே 29 இயக்கதின நிகழ்வுகள்

## பெரம்பலூர்





## தஞ்சை







## தூத்துக்குடி








பெரம்பலூரில் மாவட்டச் செயலாளர் பண்பாளர். சிவக்குமார் தலைமையில் மக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

தஞ்சையில் மாவட்டச் செயலாளர் பண்பாளர் பேரா.முருகானந்தம் தலைமையில் மாணவர்களுக்கு தன்னம்பிக்கை பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

தூத்துக்குடியில் மாவட்டச் செயலாளர் பண்பாளர் கந்தசாமி ஏற்பாட்டில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

## பாறையோடு பாறையாய்...

பொன் விளையும்
பூமியைக் கடந்தார்!

விளைச்சலை
மறந்தார்!

வெள்ளாமை
துறந்தார்!

பற்றியெரியும் வீட்டை
பார்த்தே சென்றார்!

அணைத்திடத்
துணையாக...

ஆறுதலுக்கு
யார் ?

சுயநலத்
தேனுண்ணும்...

கயவரென
வண்டானார்!

வற்றிய
குளமானார்!

வறண்ட
குணமானார்!

பாலையில்
பயணமானார்!

பாறையோடு
பாறையானார்!

கவிஞர்.கலியுகன் கோபி
சென்னை

## போற்றுவோம் செவிலியரை !

புதுப்புது புதர்களாய்
புவியில் முளைத்திட்ட
உயிர்க்கொல்லி மாயவரை
பயிர்ச்சேதமின்றி புதைத்திட

பூத்திட்ட மலர்களை
எத்திக்கும் காத்திட
அரும்பெரும் அன்னையே,
மருந்திடும் மல்லிகையே!

விண்ணின் வெண்ணிலவாய்
மண்ணில் உலாவரும்
உள்ளத்தில் கள்ளமிலா
வெள்ளைத் தேவதைகளே!

கரையும் கற்பூரமாய்
கருணை மழைபொழியும்
பொறுமையின் சிகரமே,
அருமை அற்புதமே!

பெற்றவள் காணும்முன்
உற்றவர் தீண்டும்முன்
ஓடிவந்து கரமேந்தும்
ஈடில்லா இதயங்களே!

இன்பதுன்பம் மறந்த
தன்னலம் துறந்த,
பொதுந(ல்)லப் புனிதர்களை
போற்றியே வாழ்த்துவோமே!..

கவிஞர். ஆசிரியர். க.தேவிகா
தூத்துக்குடி